## <u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

## <u>MCOP.No.20/2017</u>

2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் நாள் வெள்ளிக்கிழமை **ம.சா.2**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு 1 பெஞ்சு கிளார்க் திரு.கே.பழனிசாமி என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கருப்பு | **வட்டம்** | திருப்புவனம் |
| **த.பெ** | ராக்கப்பன் | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | திருப்புவனம் | **வயது** | 64/2023 |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல சம்மன் வரவில்லை. மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். விபத்து சமயத்தில் வாகனத்தை செல்வம் ஓட்டி வந்தார். அந்த வாகனம் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் அந்த வாகனம் எனக்கு சொந்தமானது என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த விபத்தில் இறந்து போன செல்வம் என்பவர் தலையில் காயம்பட்டுத்தான் இறந்தார் என்றால் சரிதான். அவர் தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டினாரா என்று எனக்கு தெரியாது. அந்த சாலை 15 அடி அகலம் இருக்கும். எனக்கு எதிரே வந்த வாகனம் தெற்கு நோக்கி வந்தது. அந்த வாகனத்தை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும் மனுதாரர்களுக்கு ஏதாவது இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் 2ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன செல்வம் எனது

உறவுக்காரர் என்றால் தூரத்து சொந்தம். செல்வம் எனது உறவுக்காரர் என்பதால் விபத்தை பார்க்காமல் பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.